**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண்.348/2020</u>**

**நாள்– 21.01.2026**

**பி.வா.சா. 1 – திரு.நடராஜன்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1) நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். கட்டுமானத் தொழில் செய்து வருகிறேன். 6ம் பிரதிவாதியின் சகோதரியை நான் திருமணம் செய்துள்ளேன். எனக்கு திருமணமாகி 30 வருடங்கள் ஆகிறது. 6ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் கோவிந்தன். கோவிந்தன் அவரது மனைவியை திருமணம் செய்த வகையில் ரங்கனூருக்கு வந்தார் என்றால் சரிதான். நானும், எனது மனைவியை திருமணம் செய்த வகையில் ரங்கனூருக்கு வந்தேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு தர்மபுரி மாவட்டம், பூதநத்தம் கிராமத்தில் இருந்தேன் என்றால் சரிதான். நான் பிறந்து வளர்ந்தது பூதநத்தம் கிராமம் என்றால் சரிதான். எனக்கு ரங்கனூரில் 1 வீடும் வள்ளிநகரில் 1 வீடும் உள்ளது என்றால் சரிதான். எனது மாமனார் கோவிந்தன் நல்லாம்பாளையம் ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் எனக்காகவும் மற்ற பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதியைத் தவிர மற்ற பிரதிவாதிகள் எனக்கு நேரடி உறவினர்கள் இல்லை என்றால், 6 மற்றும் 9ம் பிரதிவாதி எனது சகலை, 2ம் பிரதிவாதி எனது அண்ணன், 3ம் பிரதிவாதி எனது அண்ணனின் மகள், 10ம் பிரதிவாதி எனது ஒன்றுவிட்ட பெரியம்மா மகன், 5, 11 மற்றும் 8ம் பிரதிவாதி எனது பெரியம்மா மகன், 12ம் பிரதிவாதி எனது அப்பாவின் அக்கா மகள், 13ம் பிரதிவாதி எனது மனைவி ஆவர்.

2) எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதிகள் தனிப்பட்ட பிரச்சனையினால் கோவிலில் நாங்கள் கும்பிடக் கூடாது என்று தடுத்ததாக கூறியுள்ளதால் தான் நாங்கள் கோவிலுக்குள் பிரச்சனை செய்தோமா என்றால் சரியல்ல, நாங்கள் கோவிலில் பிரச்சனை எதுவும் செய்யவில்லை. இதுவரை வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் எத்தனை முறை மனு கொடுத்தோம் என்றால் 5 முறை ஆகும். மேற்படி 5 முறையும் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு மனு கொடுத்தோம் என்றால் சரிதான். நானும் மற்ற பிரதிவாதிகளும் ஏதேனும் குழுவாக செயல்படுகிறோமா அல்லது தனிநபர்களா என்றால் தனிநபர்கள்தான்.

3) வாதிகள் தாவா சொத்தாக 2 தாக்கு சொத்துக்களை குறிப்பிட்டு உள்ள

விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து விவரம் சரியா என்றால் தவறு. அதில் என்ன தவறு உள்ளது என்றால் கோவில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்கள் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடங்களாகும். அது மட்டும் தான் தவறு, வேறு எந்த தவறும் இல்லை. எனது முதல் விசாரணையில் 2ம் பத்தியில் "கடந்த 2015ம் ஆண்டு வாதிகள் குடும்பத்தினருக்கும் எங்கள் சமுதாயத்தின் உள்ள ஒரு குடும்பத்திற்கும் ஏற்பட்ட தனிப்பட்ட காரணத்தால், விழா காலங்களில் எங்கள் சமுதாய மக்கள் வழிபாடு செய்வதை, வாதிகளும் அவரது சமுதாயத்தினரும் என்னையும் எனது சமுதாய மக்களையும் பலவிதங்களில் தடுத்து வந்தனர்" என்று குறிப்பிட்டுள்ளேன், எத்தனை வருடங்கள் வாதிகள் அவ்வாறு தடுத்தார்கள் என்றால் 2015ம் வருடம் முதலே தடுத்தார்கள்.

4) எனது முதல் விசாரணைப் பிரமாணப் பத்திரிக்கையில் 4ம் பத்தியில் தாவா கோவிலுக்கு பரம்பரை தர்மகர்த்தா என்று யாரும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அது குறித்து எனது பதிலுரையில் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணைப் பிரமாணப் பத்திரிக்கையில் "ரங்கைய கவுண்டருக்கு பூர்வீகம் பள்ளிபாளையம் அருகிலுள்ள கலியனூர். அங்குதான் அவர்களுடைய குலதெய்வக் கோவில் உள்ளது. ரங்கைய கவுண்டர் எப்போது இறந்தார், அவருக்கு எத்தனை வாரிசுகள், தற்போது அவரது வாரிசுகள் யார் யார் என்று அனைவரையும் இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை, அவர்கள் பெயரையும் குறிப்பிடவில்லை, ரங்கைய கவுண்டரின் மற்ற வாரிசுகள் யாரும் இதுபோல் வழக்கினைத் தாக்கல் செய்யவில்லை" என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அது குறித்து எனது பதிலுரையில் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன்.

5) முதல் விசாரணைப் பிரமாணப் பத்திரிக்கையில் வாதிகள் இந்த வழக்கில் எவ்வித வம்சாவழிப் பட்டியலையும் தாக்கல் செய்யவில்லை. அவர்கள் பெயரினை இந்த வழக்கில் சொல்லவில்லை. அவர்களை இந்த வழக்கில் வாதிகள் கட்சி சேர்க்கவில்லை. ஆகவே வழக்கு நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யத்தக்கது" என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அது குறித்து எனது பதிலுரையில் எதுவும் கூறவில்லை என்றால் என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். முதல் விசாரணைப் பிரமாணப் பத்திரிக்கையில் அதுபோல் எந்தப் பிரச்சினையும் ரங்கனூர் கிராமத்தில் நடக்கவில்லை. வழக்கிற்காக வாதிகள் பொய் சொல்கிறார்கள்" என்று

குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அது குறித்து எனது பதிலுரையில் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன்.

6) முதல் விசாரணைப் பிரமாணப் பத்திரிக்கையில் கோவில் நிர்வகிக்க என்று நிர்வாகஸ்தர்கள் என்று யாரும் இல்லை" என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அது குறித்து எனது பதிலுரையில் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். முதல் விசாரணைப் பிரமாணப் பத்திரிக்கையில் ரங்கனூர் மக்கள் அனைவரும் இணைந்து தான திருவிழாவினை காலகாலமாக நடத்துவது தான் வழக்கம்" என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அது குறித்து எனது பதிலுரையில் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன்.

7) முதல் விசாரணைப் பிரமாணப் பத்திரிக்கையில் ரங்கனூரினைச் சார்ந்த அனைத்து பொதுமக்களும் தாவா கோவில் நிர்வாகப் பொறுப்பில் இருந்து வருகிறார்கள்"என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அது குறித்து எனது பதிலுரையில் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். முதல் விசாரணைப் பிரமாணப் பத்திரிக்கையில் தாவா கோவிலின் கணக்கு ஆவணங்கள் அனைத்திலும் தர்மகர்த்தா என்றோ, கோவில் நிர்வாகஸ்தர்கள் என்றோ எங்கும் இல்லை" என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அது குறித்து எனது பதிலுரையில் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். மேற்குறிப்பிட்ட வாசகங்களை எனது பதிலுரையில் சொல்லாமல் முதல் விசாரணையில் கூறியுள்ளதால் மேற்குறிப்பிட்ட வாசகங்கள் சட்டப்படி ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**